Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.193/2025

Dated 26-11-2025
Deposition of witness for : PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காளிமுத்து | வயது | : | 75 |
| தந்தை பெயர் | : | கருப்பையன் | தாலுக்கா | : | திருவையாறு |
| கிராமம் | : | கஸ்தூரி பாய் நகர்,திருவையாறு | தொழில் | : | விவசாய கூலி |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

Ld. Defense **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான்தற்போது மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.

2) என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. இரண்டாவது கையொப்பம் யாருடையது என்று தெரியாது.

3)இன்றிலிருந்து சுமார் 1 ஆண்டுக்கு முன்பு நான் என் வீட்டில் இருந்து திருவையாறு- அரியலூர் மெயின்ரோட்டில் ரவுண்டானாவுக்கு அருகில் உள்ள வயலுக்கு சென்றுக்கொண்டிருந்தேன். அப்போது இரண்டு போலிசார் பார்வையிட்டு வரைபடம் வரைந்துகொண்டிருந்தார்கள்.அப்போது

என்னை பக்கத்து வயல் யாருடைது என்று கேட்டார்கள். என்னுடைய வயல் என்று சொன்னேன். கையெழுத்து கேட்டார்கள். நான் ஏன் என்று கேட்டேன். அதற்கு வரைபடத்தில் சாட்சி கையொப்பம் போடவேண்டும் என்று சொன்னார்கள். அந்த பார்வை மகஜர் இதுதான். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும்.

4)போலிசார் என்னை இது பற்றி விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) என்னிடம் ஆண் போலிஸ்தான் கையொப்பம் பெற்றார்கள். அன்றைக்கு இருந்த இரண்டு போலிசாரும் ஆண் நபர்கள்தான்.

2) நான் முன் விசாரணையில் சொன்னதுபோல் சொன்ன இடத்தில் கையொப்பம் போடவில்லை என்றும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/P.வேல் முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்